1969 மார்ச் 25]

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இது செங்கலுக்குப் பதிலாக சுவர்கள் எழுப்புவதற்கும், சுவர் எந்த உயரத்திற்கு வேண்டுமானாலும் எழுப்புவதற்க்கும், பல மாடிக் கட்டடங்கள் கட்டுவதற்கும் இந்தப் புழைக் கற்களைப் பயன்படுத்தலாம்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த செலுலார் காங்கிரீட் செகோஸ்லோவாகியா நாட்டுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது? செங்கலுக்குப் பதிலாக இதைப் பயன்படுத்துவதால் என்னென்ன நன்மைகள் என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அதைத்தான் இப்பொழுது சொன்னேன். செங்கலுக்குப் பதிலாக உபயோகிக்கும்போது, இது செங்கலை விட கனம் குறைவாக இருக்கிறது, லேசானது, புழைக் கற்களை எவ்வளவு உயரமானதாக இருந்தாலும், சுவற்றை எழுப்பலாம், எத்தனை மாடிக் கட்டடமாக இருந்தாலும் இந்தக் கற்களை உபயோகிக்கலாம். ஆர்.ஸி.ஸி. ரூப்புக்குப் பதிலாக இந்தக் கற்களைப் பயன்படுத்தலாம் என்றும் கருத்துக் கூறப்படுகிறது.

Slums around S.I.E.T. College.

*469 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the S.I.E.T. College for Women in Madras City is surrounded by slums ; and

(*b*) whether any request for their clearance has been received by the authorities ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம். S.I.E.T. கல்லூரியைச் சுற்றிலும் ஐந்து சேரிகள் உள்ளன.

(இ) இதுவரை இம்மாதிரியான வேண்டுகோள் அரசாங்கம் அல்லது வீட்டுவசதி வாரியத்தின் கவனத்திற்கு வரவில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே : சார், அண்மையிலே தயாரிக்கப்பட்ட அறிக்கையிலே, மெட்ராஸ் ஸ்கூல் ஆப் ஸோஷல் ஒர்க், தயாரிக்கப்பட்ட அறிக்கையில், நாலில் ஒருபாகம் சென்னையிலே நம்முடைய ஜனத்தொகை 20 லட்சத்தில் கால் பாகம், கிட்டத்தட்ட 5 லட்சம் சேரிகளில் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறது. அப்படி இருப்பதால், இந்த அரசாங்கம் சேரிகளில் இருக்கும் மக்களை வேறு நல்ல இடத்திற்குக் கொண்டுபோய் அமர்த்துவதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா ? அது எந்த அளவிற்கு வெற்றிபெற்றிருக்கிறது என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : சேரிகளை அகற்றும் திட்டத்தில் கூடுமான வரையில் அவர்களை அங்கங்கேயே வைக்க வேண்டும் என்றுதான் செய்யப்படுகிறது. அப்படிப் பார்க்கும்போது, 491 சேரிகள் சென்னையில் இருக்கின்றன. கிட்டத்தட்ட 100 சேரிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. 57 சேரிகளில் வேலை துவங்கப்பட்டிருக்கிறது. வேலை நடந்துகொண்டே இருக்கிறது.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், இந்த எஸ்.ஐ.இ.டி. கல்லூரியில் ஒரு ஸ்விம்மிங் பூல் இருப்பதாகக் கூறுகிறார்கள் . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே இருப்பது சேரிகளைப் பற்றி . . . .

THIRU T. MARTIN : Sir, there is a swimming pool in the S.I.E.T. College.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றி இந்த அமைச்சரிடம் வராது. இவர்கள் சேரியைப்பற்றித்தான் சொல்ல முடியும்.

THIRU T. MARTIN : Sir, I am coming to that . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி சொல்லுங்கள்.

திரு. டி. மார்டின்: அந்த எஸ்.ஐ.இ.டி. கல்லூரியில் ஒரு ஸ்விம்மிங் பூல் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்த ஸ்விம்மிங் பூல் அங்குள்ள மாணவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், பக்கத்திலுள்ள மக்கள் வந்து அந்தக் கல்லூரி ஸ்விம்மிங் பூலை கொஞ்சம் தவறுதலாக உபயோகிக்கும் நிலை இருப்பதாகச் சொல்லப்படுவது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ? அப்படிக் கொண்டு வரப்பட்டிருந்தால், அதன்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நல்ல அனுபவம் இருக்கிறது என்று கருது கிறேன். அதுபற்றி அரசாங்கத்திற்குத் தகவல் கிடையாது. (பலத்த சிரிப்பு).

கோயில்களிலிருந்து நிதி வழங்கல்.

***470—வினா : திரு. என். எஸ். வி. சித்தன், திரு. மு. கிருஷ்ண மூர்த்தி :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டில் உள்ள கோயில்களிலிருந்து தமிழ்நாடு அரசுக்குக் கணிசமான அளவு தொகையை வளர்ச்சி நிதி என்கிற பெயராலோ அல்லது வேறு பெயராலோ கொடுக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இல்லை. "வளர்ச்சி நிதி" என்ற பெயரிலோ அல்லது பிற பெயரிலோ இம்மாநிலத்திலுள்ள அற நிலையங்கள் அரசாங்கத்திற்கு நிதி வழங்க வேண்டுமென்று எதும் ஆணையோ அன்றிச் சுற்றறிக்கையோ அனுப்பப்படவில்லை.

திரு பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, திருப்பதியில் அங்கே உள்ள கோயில் வருமானத்திலிருந்து ஒரு பல்கலைக்கழகமே அமைத் திருக்கிறார்கள். அதேபோல, தமிழகத்தில் பல்கலைக் கழகம் அமைக்கா விட்டாலும், கோவில் வருமானத்தில் இருந்து கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அறநிலையப் பண்டிலிருந்து பழனியில் ஒரு கல்லூரி அமைக்கப்பட்டிருக்கிறது. கல்லூரிகள் அமைக்க வாய்ப்புக்கள் எங்கு எங்கு இருக்கிறதோ, அதை அரசு கவனிக்கும்.

திரு கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, தெய்வீகப் பேரவை என்ற பெயரிலே அறநிலைய ஆணையர் அவர்கள் பணம் வசூலிக் கிறார்கள். அது அரசின் அனுமதி பெற்றுத்தான் செய்யப்படுகிறதா ? அப்படி வசூல் செய்துள்ள பணம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : காமன் குட் பண்ட் என்ற முறையில் கமிஷனர் அவர்கள் பணம் ஒவ்வொரு ஊர்களிலும், வாலண்ட்ரி கன்ட்ரிபூஷன் என்ற முறையில் வசூலிக்கப்படுகிறது அப்படிப்பட்ட பண்டுகள் தவிர வேறு விதமான பண்டுகள் கிடையாது அதுவும் கட்டாயம் இல்லை.

திரு. க. ர. நல்ல சிவன் : இந்த அறநிலைய நிதி சம்பந்தமாக, கல் யாண மண்டபங்கள் கட்டலாம் என்று உத்தரவு இடப்பட்டிருக்கிறதா ? அப்படியானால், இந்த நிதியிலிருந்து எவ்வளவு கல்யாண மண்டபங்கள் ராச்சியம் பூராவிலும் கட்டப்பட்டிருக்கிறது என்று கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அதற்கான தகவல் என்னிடம் இல்லை, தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.